ஜவஹர்லால் நேரு...

1–ம் பக்கத் தொடர்ச்சி

பி.பி.சி தயாரித்த ஆவணப் படத்தை இந்தியாவில் ஒளிபரப்ப மத்திய அரசு தடை விதித்துள்ளது. இதையடுத்து சர்ச்சைக்குரிய ஆவணப் படம் யூடியூப் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் இருந்து நீக்கப்பட்டுவிட்டது.

தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2021ன் கீழ் அவசர உத்தரவு பிறப்பித்த நிலையில், மோடியை விமர்சிக்கும் வீடியோவை இணையத்தில் பதிவிட்ட 50க்கும் மேற்பட்டவர்களின் டுவிட்டர் கணக்குகளை முடக்கவும் உத்தரவிடப்பட்டது. இந்நிலையில், டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் தடையை மீறி பிரதமர் மோடி குறித்த பிபிசி ஆவணப்படத்தை திரையிட மாணவர் அமைப்பு திட்டமிட்டது. ஆனால் இந்த இந்த ஆவணப்படத்தைத் திரையிட்டால் பல்கலைக்கழக வளாகத்தில் மத நல்லிணக்கத்திற்கு பாதிப்பு ஏற்படும், அமைதியற்ற ஒரு சூழல் உருவாகும் என்று கூறி பல்கலைக்கழகநிர்வாகம்எச்சரித்தது. ஆயினும், உலகளாவிய செய்தி நிறுவனத்தின் ஆவணப்படத்தை திரையிடுவது விதிமீறல் ஆகாது என்று கூறி மாணவர் அமைப்பினர் ஆவணப்படத்தை திரையிடும் முடிவில் உறுதியாக இருந்தனர். அதன்படி நேற்றிரவு 9 மணியளவில் ஆவணப்படத்தை திரையிட சிலநிமிடங்களே இருந்த நிலையில், திடீரென பல்கலைக்கழக வளாகத்தில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. இதனால் ஒட்டுமொத்த பல்கலைக்கழகமும் இருளில் மூழ்கியது. இதனால் அங்கு குழப்பமான சூழல் உருவானது.

இதையடுத்து சர்ச்சைக்குரிய ஆவணப் படத்தின் வீடியோவைப் பார்ப்பதற்கான கியூ ஆர் கோடு இணைப்பானது, பல்கலைக்கழகத்தில் உள்ள சக மாணவர்கள் அனைவருக்கும் பகிரப்பட்டு, செல்போன் மூலம் ஆவணப்படத்தை பார்க்க மாணவர் அமைப்பினர் ஏற்பாடு செய்தனர். பல்கலைக்கழகத்தில் இருள் சூழ்ந்த நிலையில், மொபைல் போன் மற்றும் லேப்டாப்பில்மாணவர்கள்கூட்டாக மோடி குறித்த ஆவணப்படத்தை பார்த்துக் கொண்டிருந்தனர். அப்போது திடீரென மர்ம நபர்கள் மாணவர்களை நோக்கி கல் வீசி தாக்குதல் நடத்தத் தொடங்கினர்.

இதனால் அங்கு அசாதாரண சூழல் ஏற்பட்டது. அந்த நேரத்தில் இருள் சூழ்ந்திருந்ததால் கல் வீசிய நபர்கள் யாரென தெரியவில்லை. இதையடுத்து பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு எதிராக 'இன்குலாப் ஜிந்தாபாத்' என கோஷமிட்டபடி பேரணியாக சென்ற மாணவர்கள் வசத்த குஞ்ச்காவல் நிலையத்தில் கல்வீச்சு தொடர்பாக புகார் அளித்தனர்.

இதே போல, ஐதராபாத் பல்கலைக்கழக வளாகத்திலும் மத்திய அரசாங்கம் முடக்கப்பட்ட மோடியை விமர்சிக்கும் ஆவணப்படம் திரையிடப்பட்டு ள்ளது. இது குறித்து ஆர்எஸ்எஸ்அமைப்பின்மாணவர் பிரிவான அகில பாரதிய வித்யார்த்தி பரிஷத் (ஏபிவிபி) போலீஸில் புகார் அளித்துள்ளது.

அன்று



இன்று

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வரும் 28–ந் தேதி திருச்செங்கோடு வருகிறார். தி.மு.க. நிர்வாகிகள் 1000 பேருக்கு பொற்கிழி வழங்குகிறார். இதற்கான விழா மேடை அமைக்கும் பணி நகரட்டுப்பாளையத்தில் நடந்து வருகிறது. பணிகளை நாமக்கல் மேற்கு மாவட்ட செயலாளர் மதுரா செந்தில், தலைமை செயற்குழு உறுப்பினர் ஆர்.நடேசன், திருச்செங்கோடு ஒன்றிய செயலாளர் வட்டூர் தங்கவேல், மாவட்ட துணைச் செயலாளர் மயில்சாமி, வழக்கறிஞர் பிரிவு துணை அமைப்பாளர் சுரேஷ் பாபு ஆகியோர் உடனிருந்தனர்.

வீடு புகுந்து பெண்ணிடம்...

1–ம் பக்கத் தொடர்ச்சி

விசாரணையில், அவர்கள் தூத்துக்குடி மாவட்டம் முத்தையாபுரம் பேரின்பநகரை சேர்ந்த சத்தியசீலன் என்பவரது மகன் பேரின்பநாதன் (19), பரமக்குறிச்சி முந்திரி தோட்டத்தில் வசித்து வரும் ராபேஜஸ் என்பவரது மகன் லியோஜோப்பின் (19) என்பதும், இவர்கள் 2 பேரும் கோவை பீரிமியர் நகரில் உள்ள மெரைன்கல் லூரியில் படித்து வருவதும் தெரியவந்தது.

இதில் பேரின்பநாதன் தான் கிணத்துக்கடவு ஸட்கமி நகரை சேர்ந்த வித்யாவிடம் அரிவாளை காட்டி நகை பறித்து சென்றது தெரியவந்தது. மேலும் பேரின்பநாதன், லியோஜோப்பின் ஆகியோர் சேர்ந்த பைக் திருட்டு சம்பவங்களில் ஈடுபட்டதும் தெரியவந்தது.

இதையடுத்து கல்லூரி மாணவர்களான பேரின்பநாதன், லியோஜோப்பின் ஆகிய 2 பேரையும் போலீசார் கைது செய்தனர். மேலும்அவர்கள்மறைத்து வைத்திருந்த 5 பவுன் நகைகள், 3 மோட்டார் சைகிள்களை போலீசார் பறிமுதல் செய்துள்ள.பின்னர் கைது செய்யப்பட்ட 2 பேரையும் பொள்ளாச்சி கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

கைது செய்யப்பட்ட தூத்துக்குடி மாவட்டத்தை சேர்ந்த பேரின்பநா தன் கோவை மெரைன் கல்லூரியில் 2–ம் ஆண்டு படித்து வந்தார். இவர் கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு செட்டிபாளையம் பகுதி யில் ஒரு பெண் குளிப்பதை செல்போனில் வீடியோவாக எடுத்துள்ளார். இதுகுறித்து அந்த பெண் கொடுத்த புகாரின்பேரில், அவரை போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர். இதைஎடுத்து அவர் நிபந்தனை ஜாமீனில் வெளியே வந்துள்ளார்.

இவர் செட் டிப்பாளையம்போலீஸ்நிலையத்தில் தின மும் காலையும், மாலையும் கையெழுத்திட்டு வந்துள்ளார். இந்த நிலையில் தான் பேரின்பநாதன் பண தேவைக்காக கிணத்துக்கடவு பகுதியில் உள்ள வித்யா என்பவரின் வீட்டிற் குள் நுழைந்து அரிவாள் முனையில் நகை பறிப்பில்ஈடுபட்டுள்ளார். கண்காணிப்பு கேமராவில் பதிவான காட்சிகளால் பேரின்பநாதன் போலீசாரிடம் சிக்கியிட்டார்.

தமிழில் மொழிபெயர்க்க...

1–ம் பக்கத் தொடர்ச்சி

அனைத்து இந்திய மொழிகளிலும் வெளியிடப்பட வேண்டும் என்று தலைமை நீதிபதி தெரிவித்துள்ள கருத்தை நெஞ்சார வரவேற்கிறேன்.

அதேபோல், உயர் நீதிமன்றங்களில்மாநில அலுவல் மொழிகளை வழக்காடு மொழியாக்க வேண்டும் என்றநமது நீண்டநாள் கோரிக்கையையும்நிறைவேற்றவது, நீதியை நாட்டின் சாமானிய மக்களுக்கு அருகில் கொண்டு வரும்' என்று மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

நேற்று நடைபெற்ற டெல்லி உயர்நீதிமன்ற நிகழ்ச்சியில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சந்திரசூட் கலந்து கொண்டார். விழாவில் பேசிய அவர் 'சட்டங்கள் ஆங்கில மொழியிலேயே உள்ளதால் ஏறத்தாழ 99 சதவீத மக்களால் நன்கு புரிந்து கொள்ள முடியவில்லை.

மாநில மொழிகளில் சட்டங்கள் மொழிபெயர்க்கப்பட்டால், தீர்ப்புகள் மொழிபெயர்க்கப்பட்டால் அவற்றை மக்கள் எளிதாகப் புரிந்து கொள்வார்கள்.

இதைக் கருத்தில் கொண்டு முதல் கட்டமாக இந்தி, தமிழ், குஜராத்தி, ஒடியா ஆகிய 4 பிராந்திய மொழிகளில் மொழியாக்கம் செய்ய நீதிபதி ஏ.எஸ்.ஓகா தலைமையில் வல்லுநர்கள் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் கர்நாடக உயர்நீதிமன்ற நீதிபதி குரஜ் கோவிந்தராஜ், டெல்லி ஐ.ஐ.டி.யை சேர்ந்த மித்தேஷ் குப்தா, ஸ்டெப் பவுண்டேஷன் விவேக் ராகவன் மற்றும் சுப்ரியா சங்கரன் உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர்' என்று குறிப்பிட்டார்.

தலைமை நீதிபதி சந்திரசூட்டின் முன்னெடுப்புக்கு நாடு முழுவதும் வரவேற்பு கிட்டியுள்ளது. இந்தி, தமிழ், குஜராத்தி, ஒடியா மொழிகளில் மட்டுமல்லாமல் மற்ற மாநில மொழிகளிலும் சட்டங்களையும் தீர்ப்புகளையும் மொழிபெயர்க்க உச்சநீதிமன்றம் ஆவன செய்ய வேண்டும் என பொதுநல ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தனியார் பள்ளிகளில், கூடுதல் கட்டணம் வசூலித்தால் நடவடிக்கை!

அமைச்சர் அன்பில் மகேஷ் எச்சரிக்கை!!

சென்னை,ஜன.25–

கல்வி உரிமைச் சட்டத் தின்கீழ் சேரும் மாணவர்களிடம் கூடுதல் கட்டணம் வசூலித்தால் கடும் நடவடிக்கைஎடுக்கப்படும் என தனியார் பள்ளிகளுக்கு அமைச்சர் மகேஷ் பொய்யாமொழி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தனியார் அமைப்புகள் சார்பில் பள்ளி மாணவர்களுக்கான புதிய சிந்தனையை தூண்டும் வகையில் நடத்தப்பட்ட போட்டியில் முதல் 30 இடங்களைப் பிடித்த மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கும் நிகழ்ச்சி சென்னையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கினார். இதைத் தொடர்ந்து அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தமிழகத்தில் தேவைக்கு அதிகமாக உள்ள அரசுப் பள்ளி ஆசிரியர்களை மட்டுமே தொழிற்பயிற்சி மைய ஆசிரியர்களாகப் பணி மாற்றப்பட்டு வருகின்றனர். கூடுதல் ஆசிரியர்கள் இல்லாத பள்ளிகளில் இருந்து மாற்றம் செய்யக்கூடாது என உத்தரவிடப்பட்டுள்ளது.

அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்குவதற்கு விவரங்களை பதிவேற்றும் நிதித் துறையின் வலைத்தளத்தில் பிரச்சினை உள்ளது. இந்தத் தகவல் சம்மந்தப்பட்ட துறைக்கு தெரிவிக்கப்பட்டு, தற்போது வழக்கம்போல் அந்த வலைத்தளம் இயங்குகிறது. ஆசிரியர்களுக்கு ஊதியம் கிடைப்பதில் எந்த தி க்கலும் இல்லாமல் வழக்கம்போல் ஊதியம் கிடைக்கும்.

கல்வி உரிமை சட்டத் தின்படி தனியார் பள்ளியில் சேரும் மாணவர்களிடம் கூடுதல் கட்டணம் வசூலிக்கக் கூடாது என தனியார் பள்ளிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. விதியை மீறி கட்டணம் வசூலித்தாலோ அல்லது கூடுதல்கள் கட்டணம் வசூலித்தாலோ அரசுக்கு தகவல் தெரிவிக்கலாம். விதிமீறலில் ஈடுபடும் பள்ளிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அரசு கல்லூரிகளில் மாணவர்களுக்கு

100 சதவீத வேலை வாய்ப்பை உருவாக்க தமிழக அரசு திட்டம்!

சென்னை, ஜன.25–

தமிழகத்தில் உள்ள அரசு மற்றும்அரசுஉதவிபெறும் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கு

அதிக வேலை வாய்ப்பு கிடைக்கும் வகையில், தமிழக அரசு அனைத்து நிறுவனங்களிலும் வேலை வாய்ப்புக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

தமிழகம் முழுவதும் சுமார் 80 பாலிடெக்னிக் நிறுவனங்கள் தவிர, 30–க்கும் மேற்பட்ட அரசு மற்றும் அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகள் மற்றும் 50–க்கும் மேற்பட்ட அரசுக்கு சொந்த மானவை மற்றும் அறிவியல் கல்லூரிகள் உள்ளன. முதற்கட்டமாக, தமிழ் நாடு அரசின் கீழ் இயங்கும் பொறியியல், கலை, அறிவியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கு 100 சதவீத வேலை வாய்ப்புகளை உறுதி செய்ய வேலை வாய்ப்பு கட்டமைப்புகள்அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் ஒரு பேராசிரியரால் வழிநடத்தப்படும் வகையில் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்.

கல்லூரி வளாகத்தில் வேலைவாய்ப்பு கண்காட்சிகளைநடத்துவதற்குநிறுவனங்களை அணுகி

மாணவர்களுக்கு கற்பிக்கப்பட அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

அண்ணாபல்கலைக்கழகம் வடிவமைத்துபடி, நேர்காணலை எதிர் கொள்ளவும், நிறுவனத்தின் மனிதவள எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும்படி மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பது, அனைத்து துறைகளிலும் வேலைவாய்ப்பு அலுவலரின் தொடர்பு விவரங்களை பொறுப்பாளர் பெறுவது போன்ற செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து உயர்கல்வி அதிகாரி ஒருவர் கூறும்போது,ஒவ்வொரு நிறுவனத்தின் வேலை வாய்ப்பு குழுவில், நிறுவனத்தைப் பற்றிய தெளிவான விவரங்களை பெறுவதற்கு முன், நிறுவன இணையத் தளங்களை பார்க்குமாறு மாணவர்களை அறிவுறுத்துவது,மேலும் ஜீன்ஸ், டி சர்ட் மற்றும் அரைக்கை சட்டைகளை தவிர்ப்பதன் மூலம் தங்களை எப்படி அழகாக மாற்றுவது போன்ற விஷயங்களில் வேலைவாய்ப்பு அதிகாரி மாணவர்களுக்கு ஆலோசனை வழங்குவார் என்று கூறியுள்ளார்.

நல்லம்பள்ளியில் கட்டப்பட்டு வரும் புதிய வட்டார வளர்ச்சி அலுவலக கட்டிட பணிகளை ஒன்றிய குழு தலைவர் மகேஸ்வரி பெரியசாமி ஆய்வு செய்தார். அருகில் ஒன்றிய கவுன்சிலர்கள் காமராஜ், சோனியாகாந்தி வெங்கடேசன், மாதையன், பழனியம்மாள் பஞ்சலிங்கம் உள்பட பலர் உள்ளனர்.

10–ம் வகுப்பு, பிளஸ்1 மற்றும் பிளஸ்2

பொதுத் தேர்வு கட்டணம் செலுத்த பள்ளிகளுக்கு கூடுதல் அவகாசம்!

பிப்ரவரி 4–ந் தேதி வரை கட்டலாம்!!

சென்னை,ஜன.25–

10–ம் வகுப்பு, பிளஸ் 1 மற்றும் பிளஸ் 2 பொதுத் தேர்வு கட்டணம் செலுத்த தனியார் பள்ளிகளுக்கு பிப்ரவரி 4–ந் தேதி வரை கூடுதல் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழக பள்ளிக்கல்வி பாடத் திட்டத்தில் பிளஸ் 1, பிளஸ் 2, பத்தாம் வகுப்பு ஆகியவற்றுக்கான பொதுத்தேர்வுகள் மார்ச் 13 முதல் ஏப். 20ஆம் தேதி வரை நடத்தப்பட உள்ளது.

இந்த தேர்வை மொத்தம் 25,77,332 பேர் எழுதவுள்ளனர். இதில் பிளஸ் 1, பிளஸ் 2 வகுப்புக்கான செய்முறைத் தேர்வு அடுத்த மாதம் நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் தேர்வுத் துறையால் தற்போது தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.பொதுத் தேர்வெழுத உள்ள மாற்றுத் திறனாளிகள், தமிழ்வழி மற்றும் அரசுப் பள்ளிகளில் படித்த மாணவர்களுக்கு கட்டணம் செலுத்துவதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அதேநேரம்,தனியார்பள்ளி மாணவர்கள் தேர்வுக் கட்டணம் செலுத்த வேண்டும். இதையடுத்து, அந்தந்த பள்ளிகளின் முதல்வர்கள் மாணவர்களிடமிருந்து உரிய தேர்வுக் கட்டணத்தை பெற்று அந்த தொகையை ஜன. 20ஆம் தேதிக்குள் செலுத்த அறிவுறுத்தப்பட்டிருந்தது.

தற்போது பள்ளிகளின்கோரிக்கையை ஏற்று பொதுத் தேர்வுக் கட்டணம் செலுத்துவதற்கான அவகாசம் பிப். 4 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. எனவே, தனியார் பள்ளிகள் https://dge1.tn.gov.in என்ற இணையதளம் வழியாக தேர்வுக் கட்டணத்தை விரைவாக செலுத்த வேண்டும்.

இதில் ஏற்படும் சந்தேகங்களுக்கு அந்தந்த மாவட்ட ஒருங்கிணைப்பாளரை தொடர்பு கொள்ளலாம் என தேர்வுத் துறை தெரிவித்துள்ளது.

மத்திய அரசின் தொழிலாளர் விரோத போக்கை கண்டித்து தர்மபுரியில் ஏ.ஐ.டி.யு.சி. தொழிற்சங்கம் சார்பில் மறியல் போராட்டம் மாநில செயலாளர் சின்னசாமி தலைமையில் நடைபெற்றது. இதில் பங்கேற்ற 200 பேர் கைது செய்யப்பட்டனர்.

தமிழ்நாடு அரசு - பொதுப்பணித்துறை
கட்டட அமைப்பு - ஒப்பந்த முறை : பொதுத்தர தொகை
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.21 / VLR - CLE / 2022 - 2023 / Dated : 23.01.2023

தமிழறிந்த ஆறுதொழிலாளர்கள் அமர் சங்கமாகவும் வேலூர் பொதுப்பணித்துறை கட்டட கட்டுனர்கள் மற்றும் பதிவாளரிடம் கட்டட கணக்காளர்களும் பொறியாளர் அலுவலகம் திருவாரூர் பணிக்கு 14.02.2023 அன்று அலுவலக நேரப்படி பிற்பகல் 3.00 மணியளவு மூடு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள், தமிழறிந்த அரசு பொதுப்பணித்துறையில் பதிவு செய்துள்ள ஆறுதொழிலாளர்களுக்குமட்டுமே வரவேற்கப்படுகின்றன. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 14.02.2023 அன்று பிற்பகல் 3.30 மணியளவில் கணக்காளர்களும் பொறியாளர் அலுவலகம் வந்திருக்கும் ஒப்பந்தக்காரர்கள் / அங்கீகாரமு முகவர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வ. எண்.	பணியின் பெயர்	பணியின் தோராய மதிப்பு இ.எ.மு. உட்பட (ஜூலை இலட்சங்களில்)	முன் வைப்புத் தொகை (ரூபாயில்)	பணி முடிக்க வேண்டிய காலம் (மதுரை காலங்கள் உட்பட)
1.	வேலூர் மாவட்டம், வேலூர் சத்துவாச்சாரி வளாகத்தில் உள்ள கழிநீர் கட்டத்திற்கு உட்புற வெளிப்புற மின்வசதிகள் மற்றும் PowerWalls அமைக்கும் பணி.	113.00	65,500/-	3 மாதங்கள்

முன் வைப்பு தொகை செலுத்த வேண்டிய விவரம் மற்றும் இதர விவரங்கள் மற்றும் விரிவுரைகளை அரசு இணையதளத்தில் (http://www.tenders.tn.gov.in), வேலூர் கட்டட கட்டுனர்கள் மற்றும் பதிவாளரிடம் கட்டட கணக்காளர்களும் பொறியாளர் அலுவலகத்திலும் தெரிந்து கொள்ளலாம். வேலூர் இணையதளத்தில் முகவரி ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 13.02.2023–5.45 மணி வரை இணையதளம் பதிவிறக்கம் செய்து சமர்ப்பிக்கலாம்.
செயற்பொறியாளர் கட்டட கணக்காளர்களும் பொறியாளர் அலுவலகமும்
வேலூர் / 429 / ஒப்பந்தப்புள்ளி / 2022 கட்டட (கட்டுனர்கள் மற்றும் பதிவாளர்) கட்டடம் வேலூர் - 1.

TANEJA AEROSPACE AND AVIATION LIMITED
Regd. Office : Baagondapalli Village, Uthally Road, Denkanikottai Dist., Baagondapalli - 635114, Tamil Nadu, INDIA
Phone : 04347-233566, Fax : 04347-233414, E-mail : secretaria@taal.co.in,
Website : www.taal.co.in, CIN : L22200TZ1995PLC014430

EXTRACT OF THE STATEMENT OF CONSOLIDATED FINANCIAL RESULTS
FOR THE QUARTER AND NINE MONTHS ENDED DECEMBER 31, 2022
(INR in lakhs, unless otherwise stated)

Sr. No.	Particulars	Quarter ended			Nine Months ended	Year ended
		Dec 31, 2022 (Unaudited)	Dec 31, 2022* (Unaudited)	Dec 31, 2021 (Unaudited)	Dec 31, 2022 (Unaudited)	Mar 31, 2022 (Audited)
1	Total income (Net)	944.54	967.06	2,314.52	3,198.89	3,119.72
2	Net Profit / (Loss) for the period before tax (Exceptional items and/or Extraordinary items*)	440.42	387.16	1,227.37	1,129.69	806.55
3	Net Profit / (Loss) for the period before tax (after Exceptional items and/or Extraordinary items*)	440.42	-0.74	1,174.67	836.55	946.89
4	Net Profit / (Loss) for the period after tax (after Exceptional items and/or Extraordinary items*)	293.56	-17.22	810.23	546.89	631.29
5	Total Comprehensive Income for the period [Comprising Profit / (Loss) for the period (after tax) & Other Comprehensive Income (after tax)]	293.56	-17.22	810.23	631.29	631.29
6	Equity Share Capital (Face value of INR 5/- per share)	1,246.54	1,246.54	1,246.54	1,246.54	1,246.54
7	Reserves (excluding Revaluation Reserves) as shown in the Audited Balance Sheet of the previous year	9,003.92	9,667.14	6,528.92	8,616.59	
8	Earnings per share of INR 5/- each (Not annualised)					
	(a) Basic earnings / (loss) per share (INR)	-1.19	-0.27	3.25	2.19	
	(b) Diluted earnings / (loss) per share (INR)	-1.19	-0.27	3.25	2.19	

Notes:
1. Additional information on standalone financial results is as follows:

	Particulars	Quarter ended Dec 31, 2022	Quarter ended Dec 31, 2021	Nine Months ended Dec 31, 2022	Year ended Mar 31, 2022
	Revenue from Operations	917.68	993.43	2,198.17	3,119.72
	Profit before tax	440.42	-3.68	1,174.67	806.55
	Profit after tax	296.06	-17.22	810.23	946.89

2. The above is an extract of the detailed format of the Quarter and Nine months ended Financial Results filed with Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Quarterly Financial results are available on Stock Exchange website (www.bseindia.com) and also on Company's website (www.taal.co.in).
3. The above results have been reviewed by the Audit Committee & approved by the Board of Directors at their respective meetings held on January 24, 2023.

Place: Pune
Date: January 24, 2023

For Taneja Aerospace and Aviation Limited Limited
Ashwini Navare
Company Secretary